# KAMARAJ COLLEGE (Autonomous)

Accredited with A+ Grade by NAAC

(Affiliated to ManonmaniamSundaranar University, Tirunelveli)

**(3 Pages)** **Reg. No: ……………………………………………**

**Question Code: 26E03801-T** **Course Code : 24PMTL41**

**PG Degree - End Semester Examinations, April 2026**

**Fourth Semester**

**M.A. TAMIL**

**Sanga Ilakkiyam**

**(For those who joined in July 2024 onwards)**

**Time : 3Hours** **Maximum : 75 Marks**

பகுதி அ - (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

CO:1 K:3 1. ‘கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" என்ற குறுந்தொகைப் பாடலின் ஆசிரியர் ________________

(அ) இறையனார் (ஆ) கபிலர்

(இ) பரணர் (ஈ) மாமூலனார்

CO:1 K: 4 2. கலித்தொகை பாடப்பட்ட பாவகை ________________

(அ) கலிப்பா (ஆ) ஒத்தாழிசைக் கலிப்பா

(இ) வஞ்சிப்பா (ஈ) வெண்பா

CO:2 K:3 3. “நீல மணிமிடற்று ஒருவன்” என்பது ________________

(அ) சிவபெருமான் (ஆ) பிரம்மன்

(இ) விஷ்ணு (ஈ) திருமால்

CO:2 K:1 4. ஆய் அண்டிரனைப் பாடிய புலவர்________________

(அ) கபிலர் (ஆ) பரணர்

(இ) முடமோசியார் (ஈ) குடந்தையூர் கீரன்

CO:3 K:1 5. பதிற்றுப்பத்து ஆறாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் ________________

(அ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் (ஆ) இமயவரம்பன்

(இ) செங்குட்டுவன் (ஈ) செல்கெழு குட்டுவன்

CO:3 K:2 6. கூந்தல் மிகுந்த அரக்கன் ________________

(அ) இராவணன் (ஆ) கேசி

(இ) மோகினி (ஈ) எமன்

CO:4 K:3 7. நல்லியக்கோடனைத் தலைவனாக கொண்ட ஆற்றுப்படை ________________

(அ) திருமுருகாற்றுப்படை (ஆ) பெரும்பாணாற்றுப்படை

(இ) சிறுபாணாற்றுப்படை (ஈ) கூத்தராற்றுப்படை

CO:4 K:3 8. சேர நாட்டின் தலைநகரம் ________________

(அ) வஞ்சி (ஆ) கொற்கை

(இ) பூம்புகார் (ஈ) மதுரை

CO:5 K:1 9. குறிஞ்சிப்பாட்டின் அடி அளவு ________________

(அ) 103 (ஆ) 308

(இ) 500 (ஈ) 261

CO:5 K:4 10. குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்ற மன்னன் ________________

(அ) நல்லியக்கோடன் (ஆ) பாரி

(இ) பிரகத்தன் (ஈ) அதியமான்

## பகுதி ஆ – (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

## அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளி

CO:1 K:4 11. (அ) நும் பாடப்பகுதியில் இடம்பெற்ற நற்றிணைப் பாடல்களில் உள்ள நெய்தல் நிலக்காட்சிகளைப் புலப்படுத்துக.

**(அல்லது)**

(ஆ) நும் பாடப்பகுதியில் இடம் பெற்ற குறுந்தொகை பாடல்களில் உள்ள குறிஞ்சி நிலக் காட்சிகளை எடுத்துக் கூறுக.

CO:2 K:2 12. (அ) கையறுநிலைப் பாடல் என்றால் என்ன? பாரியின் மகளிர் பாடிய கையறுநிலைப் பாடலைத் தருக

**(அல்லது)**

(ஆ) பரிசில் துறையினைக் கூறி, நள்ளியின் கொடைச் சிறப்பினைத் தருக

CO:3 K:4 13. (அ) செல்வ கடுங்கோ வாழியாதனை, காக்கைப் பாடினியார் வாழ்த்தும் திறனை விவரி

**(அல்லது)**

(ஆ) திருமாலிடம் இருந்து தோன்றியவை என்று பரிபாடல் கூறுவனவற்றைத் தருக

CO:4 14. (அ) சிறுபாணாற்றுப்படை சித்தரிக்கும் மதுரையின் சிறப்பினைத் தருக

K:4 **(அல்லது)**

(ஆ) நல்லியக்கோடன் பாணர்களுக்குப் பரிசில் தரும் சிறப்பினை விவரி

CO:5 15. (அ) குறிஞ்சிப்பாட்டு கூறும் தோழியின் சொல் வன்மையினைத் தருக

K:4 **(அல்லது)**

(ஆ) தலைவன் தலைவியிடம் கூறிய பண்பாட்டு நெறியினையும் தெய்வத்தின் மீது ஆணையிட்டு கூறியனவற்றையும் தருக

## பகுதி இ– (5× 8 = 40 மதிப்பெண்கள்)

**அனைத்துவினாக்களுக்கும் 600 சொற்களுக்குமிகாமல் விடையளி**

CO:1 K:1 16. (அ) ஐங்குறுநூற்றில் முல்லைத் திணைப் பாடல்களில் செவிலி கூற்றில் இடம் பெற்ற செய்திகளைத் தருக.

**(அல்லது)**

(ஆ) கலித்தொகையில் இடம் பெற்றுள்ள பாலைக்கலியின் செய்திகளைத் தொகுத்துரைக்க.

CO:2 K:4 17. (அ) பாரியின் பரம்பு மலையின் வளத்தினையும் பாரியின் வீரத்தினையும் விவரிக்க.

**(அல்லது)**

(ஆ) பாடாண் திணையை விளக்கி, ஓரியின் வில்லின் தன்மையையும் கொடைச் சிறப்பினையும் விவரி.

CO:3 18. (அ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் வெற்றிச் சிறப்பினை விவரி.

K:4 **(அல்லது)**

(ஆ) செவ்வேளின் வீரச் செயல்களைக் குறிப்பிடுக.

CO:4 K:4 19. (அ) சிறுபாணாற்றுப்படையில் இடம் பெற்றுள்ள வரலாற்றுச் செய்திகளைத் தருக.

**(அல்லது)**

(ஆ) நல்லியக்கோடனின் ஊருக்குச் செல்லும் வழியினை விவரி.

CO:5 K:4 20. (அ) இயற்கையாக வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கூறி தோழி செவிலித் தாயிடம் அறத்தொடு நிற்றலை விவரி.

**(அல்லது)**

(ஆ) குறிஞ்சிப்பாட்டு கூறும் தலைவன் நாட்டின் சிறப்புக்களையும் தலைவனின் வீரத்தினையும் எடுத்துக் கூறுக.